## 2. எழுத்துருக்களின் வடிவமும் பயன்படுத்தப்பட்ட முறைகளும்

கருவிகள்:
வேறுபாடுகளைப் பொறுத்து பார்க்க.
(வலதுபக்கம் பார்க்கவும்)

- மரபுவழி எடுத்துரைப்பு வடிவம்: எழுத்துரு ஒரு பயிற்சிப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் இல்லாதிருத்தலால் இது ஊக்கமளிப்பதாக இல்லை.
- விடுமுறைக் கதைகள், நகைச்சுவைகள், சமையற் குறிப்புகள் போன்ற பொருள் சார்ந்த எழுத்துருக்கள். ஒரு மாணவன்/மாணவி தலைப்புப் பக்கத்தை வடிவமைக்கிறான்/வடிவமைக்கிறாள், எழுத்துருக்கள் கோர்க்கப்படும் அல்லது நூலாகக் கட்டப்படும். இதனை மாணவர்கள் கடனாகப் பெறலாம் (ஒரு நூலக நூல் போல) #53 யும் 54 யும் பார்க்க.
- சுவரொட்டி அல்லது படம் வடிவத்தில் வழங்கல் (A3 வடிவத்தில் அல்லது பெரிதாக), இயற்கை மற்றும் நாகரிகம் பற்றிய தலைப்புகளுக்கு (மற்றும் வாய்வழி எடுத்துரைப்புகள்) ஆகியவற்றுக்குப் பொருத்தமாக.
- கவிதைகள் முதலான கலை விளக்கங்கள்: நிறத் தாள்களில், முடியுமாயின் பல வடிவங்களில் வெட்டி ஒப்பனை செய்யப்பட்டவை. இதனை ஒரு வடிவமைப்பு போட்டியாகவோ சிறந்த ஒப்பனை செய்யப்பட்ட எழுத்துருத் தேர்வாகவோ மாற்றியமைக்கலாம்.
- மின்னணு ஊடகப் பயன்பாடு: முதல் மொழியில் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல்.
- உங்களுக்குரிய மொழியில் கலந்துரையாடு மன்றங்கள், வலைப்பதிவுகள், அரட்டை அறைகள் ஆகியவற்றில் பங்கேற்றல். மற்றைய மாணவர்களும் வகுப்புகளும் பதிவுசெய்ய இசைவுதரும் இணையத்தளம் ஒன்றை வடிவமைத்தல்.

---

## 3.தமது எழுத்துருக்களை செயல்படுத்தவும், எடுத்துரைக்கவும் மேலும் பல வழிமுறைகள்.

- தொழில்நுட்பம் மூலம் வடிவமைத்தல், கதைகளை ஒலிப்பதிவு செய்தல் (இறுவெட்டு மூலம்) செய்தி விவரணம் (அறிக்கை) ஒளிப்பதிவு (காணொளி).
- காட்சிமுறையில் விவரித்தல், நாடகம் மூலம், நடனம் மூலம், பாடல் மூலம், உரைநடைப்பாடல் மூலம் எடுத்துரைப்பு செய்தல்.